**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**D.V.C. No.12/2023**

Deposition of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயந்தி | Defence | : |
| Husband Name | : தினேஷ் | Court | : |
| Village | : மேலப்பாதி | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 28 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day. 18.05.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

முதல் விசாரணை:-

நான் இந்த மனுவின் மனுதாரர் மற்றும் மனுதாரர் தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மனுதாரருக்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் கடந்த 10.09.2021 அன்று நடந்த திருமணத்தின் திருமண அழைப்பிதழின் அசல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 13.10.2021 தேதியிட்ட திருமண பதிவு சான்று (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 21.06.2022 தேதியிட்ட மனுதாரரின் குழந்தையின் தியாவின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரருக்கு திருமணத்தின்போது செய்த சீரவரிசை பொருட்களுக்கான ரசீதுகள், சீர்வரிசை பொருட்களின் பட்டியல்கள் அசல் **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.